தினமலர் 06/08/2019

# 'டுபாக்கூர்' ஆராய்ச்சிக்கட்டுரை சமர்ப்பித்தால் தப்ப முடியாது

திருப்பூர், ஆக. 6–

கருத்து திருட்டு கண்டறியும் சாப்ட்வேரை, அனைத்து பல்கலை மற்றும் உயர் கல்வி நிலையங்கள் பொருத்திக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

பல்கலை மற்றும் கல்லூரிகளில், சமர்ப்பிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் உள்ளிட்டவற்றில், தகவல்கள் மற்றும் கருத்துகள், ஏற்கனவே வெளியான கட்டுரைகளில் இருந்து, காப்பியடித்து, வெளியிடப்படுவதாக, அவ்வப்போது புகார்கள் எழுகின்றன.

இதைத் தடுக்க, புதிய திட்டம் அமலுக்கு வர உள்ளது. இதன் மூலம், கருத்து மற்றும் தகவல்களை எளிதாகத் திருட முடியாது.

பல்கலை மானியக் குழு(யு.ஜி.சி.,), துணை வேந்தர்களுக்கு அனுப்பிய கடிதம்:

மத்திய மனித வளத் துறை அமைச்சகம், தகவல் மற்றும் நூலக நெட்வொர்க் மையத் திடம், கருத்து திருட்டு கண்டறியும் சாப்ட்வேரை, பல்கலை மற்றும் உயர்கல்வி நிலையங்களுக்கு இலவசமாகப் பொருத்தும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறது. ஆகஸ்ட் முழுவதும், இதைச் சோதனை அடிப்படையில், பயன்படுத்திக்கொள்ளலாம். செப்டம்பர் 1 முதல், இத்திட்டம் அமலாகிறது.

துறை உறுப்பினர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஒருங்கிணைப்பாளர்களின் இ மெயில் மற்றும் தொடர்பு எண்களை, பல்கலைகள், அனுப்பிவைக்க வேண்டும்.

அனைத்து பல்கலைகளும், இந்த சாப்ட்வேரை செயல்படுத்துவதில் ஒத்துழைப்பு தர வேண்டும்.

இவ்வாறு யு.ஜி.சி., கேட்டுக்கொண்டுள்ளது.